**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – கல்வி – விடுதிகள் – 2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பு – தென்காசி மாவட்டம், பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி, சோலைச்சேரி மற்றும் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, சங்கரன் கோவில் ஆகிய இரண்டு விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது – நிதி ஒப்பளிப்பு அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(1))த்துறை

**அரசாணை (நிலை) எண்.65**

**நாள் 05.08.2022**
**சுபகிருது, ஆடி 20**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.10, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(1)த்துறை, நாள்.17.02.2022.
2. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண்.சி2/3228/2021, நாள் 16.05.2022.

* * * * * *

**ஆணை:**

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தென்காசி மாவட்டம், சோலைச்சேரி பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு ரூ.3,29,12,000/– மற்றும் சங்கரன் கோவில் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக்கு ரூ.3,31,42,000/– என மொத்தம் ரூ.6,60,54,000/– செலவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது. மேலும் பணி முன்னேற்றத்தின் அடிப்படையில் நிதி ஒப்பளிப்பிற்கான கருத்துருவை அனுப்பி வைக்குமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவில் இரண்டு விடுதிகளுக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதை தொடர்ந்து பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளரின் கடிதத்தில்,

இவ்விடுதிகளுக்கான கட்டுமானப்பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளதாகவும், கூடிய விரைவில் பணிகள் துவங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டு, கட்டுமானப்பணிகள் துவங்க அரசாணையில் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகையான ரூ.6,60,54,000/–க்கு நிதி ஒப்பளிப்பை உரிய கணக்கு தலைப்புகளில் ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. எனவே, தென்காசி மாவட்டம், சோலைச்சேரி பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதி மற்றும் சங்கரன் கோவில் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதி ஆகிய இரண்டு விடுதிகளுக்கு கட்டுமானப் பணிகள் துவங்க ரூ.6,60,54,000/–ஐ ஒதுக்கீடு செய்யுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, தென்காசி மாவட்டம், சோலைச்சேரி பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக்கு ரூ.3,29,12,000/– மற்றும் சங்கரன் கோவில் சீர்மரபினர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக்கு ரூ.3,31,42,000/– என மொத்தம் ரூ.6,60,54,000/– (ரூபாய் ஆறு கோடியே அறுபது இலட்சத்து ஐம்பத்து நான்காயிரம் மட்டும்) செலவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

i. <u>பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி (ரூ.3,29,12,000/–)</u>

"4225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் –JY பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்"

(IFHRMS த.தொ.கு. 4225–03–277–JY– 41601)

ii. <u>சீர்மரபினர் நல விடுதி (ரூ.3,31,42,000/–)</u>

"4225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் குறித்த மூலதனச் செலவு 03 – பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 – கல்வி – மாநிலச் செலவினங்கள் –JZ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவரில்லக் கட்டடங்கள் கட்டுதல் – 416 பெரும் பணிகள் – 01 பெரும் பணிகள்"

(IFHRMS த.தொ.கு. 4225–03–277–JZ– 41601)

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.37290/நிதி(பி,மிபி(ம)சிந)/2022, நாள் 29.07.2022–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை– 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர்,
சென்னை– 5.
முதன்மை தலைமைப் பொறியாளர்,
தலைமைப் பொறியாளர் (பொது) மற்றும் தலைமைப் பொறியாளர்
சென்னை மண்டலம், பொதுப்பணித்துறை, சென்னை –5.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
மாவட்ட கருவூல அலுவலர், தென்காசி.
மாவட்ட ஆட்சியர், தென்காசி.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நல அலுவலர், தென்காசி.

<u>நகல்:</u>
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை) அலுவலகம்,
சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
நிதி (பி, மி.பி (ம) சி.ந)த்துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

வா. அகுா
5/8/2022
**பிரிவு அலுவலர்**
5.8.2022